அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 11 / 2018
தேதி : 24.01.2018

பேருந்து போக்குவரத்து கட்டண உயர்வை கண்டித்து

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில்

**வரும் 30ந்தேதி மாநிலம் தழுவிய**
**கண்டன போராட்டம் நடத்துவதென முடிவு**

போக்குவரத்துத்துறையின் சார்பில் 6 வருடங்களுக்கு பிறகு பயணிகளுக்கான கட்டணத்தை கடந்த காலங்களில் இல்லாத அளவு அதிகமாக உயர்த்தி நடைமுறைபடுத்தியிருப்பது மக்களுக்கு மிகுந்த பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜி.எஸ்.டி, விலைவாசி உயர்வு, நியாயவிலைக்கடையில் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு என மக்கள் அடிப்படை தேவைகளுக்காக தினந்தோறும் அவதியுறும் நிலையிலும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையிலும் அரசு போக்குவரத்து துறையின் சார்பில் மிக அதிக அளவில் கட்டண உயர்வு என்பது கண்டிக்கத்தக்கது.

பணிக்கு செல்பவர்கள், சொந்த ஊர்களுக்கு செல்பவர்கள், கல்லூரி செல்லும் மாணவர்கள், சிறுதொழில் புரிபவர்கள், மருத்துவமனைக்கு செல்பவர்கள் என அனைத்து தரப்பு மக்களும் கட்டண உயர்வுக்கு முன் அரசாங்க பேருந்துசேவையை பயன்படுத்தினர். ஆனால், இன்று தனியார் போக்குவரத்து கழகங்களுக்கு இணையாக கட்டண உயர்வில் ஏற்றம் கொண்டு வந்திருப்பது மக்கள் அவசர தேவைக்காக கூட ஒரு இடமிருந்து மற்றொரு இடம் செல்ல அரசின் சேவையை உபயோகிக்க முடியாத வகையில் அமைந்துள்ளது.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



எனவே, தமிழக மக்களின் பொருளாதார நிலையை உணர்ந்து, தமிழக அரசு உடனடியாக பேருந்து கட்டண உயர்வை திரும்பப் பெற வேண்டும் எனவும், தற்போது இலவசங்களை மக்கள் ஏற்க விரும்பாத நிலையில், இலவசங்களுக்காக வைத்திருக்கும் சேமிப்பின் பகுதியை போக்குவரத்துத் துறைக்கு பயன்படுத்தி செலவுகளை சமன்செய்ய முடியும் எனவும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

மேலும், பேருந்து போக்குவரத்து கட்டண உயர்வை கண்டித்து அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வரும் 30-ந்தேதி மாநிலம் தழுவிய கண்டன போராட்டம் நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com